செ.வெ.எண்.54 நாள்.20.04.2017

## பத்திரிகை செய்தி குறிப்பு

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம் மூலம் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி பகுதிகளில் நகராட்சி மூலம் கணக்கெடுப்பு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பார்வை 1ல் கண்ட கடிதத்தின் தொடர்ச்சியாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி பகுதிகளில் விடுபட்ட பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று பட்டியல் தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்கு வருகிற 26.4.2017, 27.4.2017 மற்றும் 28.4.2017 ஆகிய தினங்களில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி அலுவலகங்களிலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலும் கான்கிரீட் வீடு இல்லாத நலிவடைந்த பிரிவின் கீழ் (மாத வருமானம் ரூ.25,000/-) வாழும் குடும்பங்கள் தங்களுக்கு சொந்தமான மனையில் புதிய கான்கிரீட் குடியிருப்புகள் (300 சதுர அடி பரப்பளவு)கட்டுவதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத் தொகையான ரூ.2.10 இலட்சங்கள் பெற்று தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ளவும், அரசுக்குச் சொந்தமான ஆட்சேபகரமான நிலங்களில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு பயனாளிகளின் பங்களிப்புடன் அரசால் கட்டப்படும் குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெறவும் மற்றும் வங்கிகள் மூலமாக 6.5 % வட்டிக்கான மானியத்திலும் கடன் பெற்று வீடுகள் கட்டவும் / வாங்கிக் கொள்ளவும் விரும்பும் பயனாளிகள் பயன்பெறும் வகையில் இச்சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே பயனாளிகள் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

20/4/2017
நிர்வாகப்பொறியாளர்
திருநெல்வேலி கோட்டம்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி